

# “அறிவே அரண் – அண்ணா போட்ட கையெழுத்து!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத்திருவிழா’ நிகழ்ச்சியின் ஒருபகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் முதல் அமர்வுக்குத் தலைமை வகித்து, திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் ஆற்றிய உரை :**

“உளமையும் உப்பக்கம் காணுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி சார்பில், இந்த நிகழ்ச்சிகள் பத்து அமர்வுகளாக நடைபெறவிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக இந்த நிகழ்ச்சிக்கு அறிவுத் திருவிழா என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள். மிக அருமையான பெயர், வரலாற்றுப் பெயர்.

## அறிவுத் திருவிழா

புத்தன் அறிவு இயக்கத்தைத் தொடங்கினான். அதைத் தொடர்ந்து ராமசாமி பெரியார் அறிவு இயக்கத்தைத் தொடங்கினார். அறிஞர் அண்ணா அவர்கள், இங்கே கழகத் தலைவர் ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டதைபோல தலைமைக் கழகத்திற்கு ‘அறிவகம்’ என்று பெயர் சூட்டினார். அன்பகத்தை அண்ணா அவர்கள் திறந்து வைத்து உரையாற்றுகையில் ‘அறிவிலிருந்து அகந்தையும் பிறக்கும், அன்பும் பிறக்கும். நாம் முதலில் தலைமைக் கழகத்திற்கு ஒரு கட்டடத்தை வாங்கினோம், அதற்கு ‘அறிவகம்’ என்று பெயர் சூட்டினோம். அறிவு மனிதனுக்கு மிக அவசியமானது. காண்பது அறிவு, கண்டு தெளிவது ஞானம்’ என்று பேசினார்கள்.



**க.திருநாவுக்கரசு**
**திராவிட இயக்க ஆய்வாளர்**



இன்னொரு பணியை அண்ணா அவர்கள் தொடக்க காலத்தில் செய்தார்கள். மாணவர்களாக இருப்பவர்கள் அல்லது இளைஞர்களாக இருப்பவர்கள் யாராய் இருப்பினும் அவரிடத்தில் சென்று கையெழுத்து கேட்டால், ‘அறிவே அரண்’ என்று போட்டுக் கொடுப்பார்கள். அந்த அறிவு, வாழும் மனிதனுக்கு அவ்வளவு ஆற்றலுக்குரியது; வழிகாட்டவல்லது. ஆகவே அறிவு இயக்கத்தைச் சேர்ந்தவர்களான நாம் அறிவுத் திருவிழா நடத்துவது ஒன்றும் வியப்பானது இல்லை.

ஆனால், இந்த நிகழ்வுக்கு இந்தப் பெயரை சூட்டியவர் யார்? இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி அவர்களா? அப்படியானால், நாம் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறோம். அவர் தந்தையைக் காட்டிலும், தாத்தாவைக் காட்டிலும், அண்ணாவைக் காட்டிலும், பெரியாரைக் காட்டிலும் இந்தக் காலத்தில் இந்தப் பெரும் பாய்ச்சலோடு இருப்பதற்கு, நமது பாராட்டையும், மகிழ்ச்சியையும் இந்த நேரத்தில் நாம் தெரிவித்துக் கொள்கிறோம்.

## முப்பெரும் ஆளுமைகள்

இப்பொழுது நமது முதலாம் அமர்வில் மூன்று முப்பெரும் ஆளுமைகள் அமர்ந்திருக்கிறார்கள். ‘வரலாறாய் வாழும் இயக்கம்’ என்கிற தலைப்பில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் அன்பிற்குரிய சபாபதி மோகன் அவர்கள் பேசவிருக்கிறார். அடுத்து ‘தேசிய அரசியலில் தி.மு.க.’ என்கிற தலைப்பில், ஆ.ராசா அவர்கள் பேசவிருக்கிறார். தேசிய அரசியலில் தி.மு.க. எப்படி தனித்தன்மையோடு திகழ்கிறது என்பதை அவர்கள் புட்டு வைக்க வேண்டும். நாம் யார் என்பதை இன்றைய இளைஞர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அந்த ஆற்றல் உடையவர் ஆ.ராசா அவர்கள். ஏனென்றால், நாடாளுமன்றத்தின் மக்களவையில் அது தெள்ளென தெரிகிறது. இங்கேயும் அவர் நமக்கு சிறப்பாக எடுத்துக்காட்டுவார், நமது உணர்ச்சியைக் கூட்டுவார்.

அதற்கு அடுத்து பேசவிருப்பவர் திருச்சி சிவா அவர்கள். மாநிலங்களவையில் கலக்குகிறார். திருச்சி சிவா பேசினால் மட்டும்தான் நான் தொலைக்காட்சியைப் பார்ப்பேன். மற்ற நேரங்களில் பார்ப்பதில்லை. தலைவலி அதிகமாகிறது. அதுவும் நாடாளுமன்றத்தில் விவாதங்கள் நடக்கிறபோது, அவர்கள் பேசுகிற மொழியும், பேசுகிற பொய்யும் நம்மை மிகுந்த கவலைக்குள்ளாக்குகின்றன. ஆகவே, அதைப் பார்க்காமல் விட்டு விடுவதே நல்லது என்று நான் செய்தியைத் தவிர, வேறு எதுவும் பார்ப்பதில்லை. ஆனால், சிவா அவர்கள் பேசினால், ராஜ்யசபா தொலைக்காட்சியில் முழுவதுமாகப் பார்ப்பேன்.

## தொலைநோக்கு இலட்சியம்

இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், திருச்சி சிவா அவர்கள் நல்ல மொழிபெயர்ப்பாளர். பிசிறு இல்லாமல் மொழிபெயர்ப்பார். ஆங்கிலத்தில் பேசுகிறவர் என்ன பேசுகிறாரோ அதையே தடுமாற்றம் இல்லாமல் தமிழில் சொல்லக்கூடிய ஆற்றல் உடையவர். அத்தகையவர் நமக்கு நாடாளுமன்ற உறுப்பினராக கிடைத்ததோடு மட்டுமின்றி, அவரும் கழகத் துணைப் பொதுச்செயலாளராக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அத்தகையவர்கள் இன்று நமது முதல் அமர்வில் பங்கு பெற்று பேச விருக்கிறார்கள்.

‘வரலாறாய் வாழும் இயக்கம்’ எனும் தலைப்பில், சபாபதி மோகன் அவர்கள் பேசி முடித்திருக்கிறார்கள். இரண்டு விஷயங்களை நான் பகிர்ந்துகொள்ள வேண்டும். இயக்கம் எது, கட்சி எது. இந்த இரண்டையும் கலந்துதான் நாம் பேசி வருகிறோம். இயக்கம் என்பது, தொலைநோக்கு இலட்சியத்தை அடைவது, திராவிட இயக்கத்துக்கு தொலைநோக்கு இலட்சியம் என்பது எது? வர்ணாசிரமம், சனாதனத்தை ஒழிப்பது. கட்சி அரசியல் என்பது மக்களிடம் சென்று, நாம் நம் கருத்துகளை எடுத்து வைத்து, அதன் மூலம் ஜனநாயக வழியாக வாக்குகளைப் பெற்று அரசு அமைப்பது. இதுதான் இயக்கமும், கட்சியுமாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த 75 ஆண்டுகளாக செய்து வருகின்ற மிகச்சிறந்த பணியாகும். அதனைத்தான் அவர் சுருக்கமாக எடுத்து வைத்துள்ளார்.

## நீண்ட நெடிய வரலாறு

‘காலத்தின் நிறம் கருப்பு-சிவப்பு’ என்ற புத்தகத்தை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். 1949-ஆம் ஆண்டு முதல் இப்போது வரை திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகளை நிறைவுசெய்து, 76-ஆம் ஆண்டில் வரலாற்றைப் படைத்துக்கொண்டு இருக்கிறது. ஆனால், அது செய்த செயல்களை, சமூக, அரசியல், பண்பாட்டு அரசியலை, இந்த 80 கட்டுரைகளில் உள்ள 1,120 பக்கங்களில் நம்மால் முழுமையாக எடுத்து வைக்க முடியுமா என்றால், கண்டிப்பாக முடியவே, முடியாது. எப்படி ஒரு பொருளைப் பார்க்கும்போது, ஒரு பகுதி மறைந்திருக்குமோ, அதுபோல்தான் வரலாற்றையும் முழுவதுமாக எடுத்துரைத்துவிட முடியாது. அவ்வளவு நீண்ட நெடிய வரலாற்றை உடையது, நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆ.ராசா அவர்கள் தேசிய அரசியலில், தி.மு.க-வின் தனித்தன்மையை நிலைநாட்டி, மிக அருமையாக பேசினார்கள். ‘நல்லதோர் வீணை’ என்று சொல்வான் பாரதி. ‘மாசில் வீணை’ என்பார் அப்பர். இந்த இரண்டையும் இணைத்துப் பார்க்கிற பேச்சாற்றல் உள்ளவர் திருச்சி சிவா அவர்கள். அவருக்கு தலைப்பு ‘மொழிப்போர் அன்றும், இன்றும்’.

88 ஆண்டுகளாக நடைபெற்று வருகிற இந்த மொழிப் போராட்டத்துக்கு தீர்வுதான் என்ன?

## தீர்வுக்கு ஓர் அழைப்பு

ஒரு காலத்தில் திராவிட இயக்கம் பேசி வந்ததை, எல்லோரும் எதிர்த்தார்கள். இன்று, கர்நாடகம், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இன்னும் சொல்லப்போனால் கம்யூனிஸ்ட்டுகள்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கையை ஆதரிக்கின்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

திருச்சி சிவா அவர்கள் 88 ஆண்டுகால மொழிப்போராட்டத்தை வெகு சுருக்கமாக இங்கு எடுத்து வைத்து, தீர்வுக்கு ஓர் அழைப்பையும் இளைஞர்களுக்கு கூறியிருக்கிறார். அத்துடன் முக்கியமாக, இளைஞர் அணியின் செயலாளர், நம் உதயநிதி ஸ்டாலின் அவர்களைத் தலைமையேற்கும்படியும், உங்கள் பின்னால் நாங்கள் இருக்கிறோம் என்ற உறுதியை அளிக்கும் விதமாகவும் அவரின் உரை அமைந்திருந்தது.

இத்தகைய கடமையை நிறைவேற்றவிருக்கும் இலட்சியவாதி உதயநிதி ஸ்டாலின் அவர்களை நாம் வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம்.” ●

# அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

**‘சென்னையில் ஒரு ‘வேற லெவல்’ புத்தகக் காட்சி!’ என்ற தலைப்பில் ‘அந்திமழை’ இணையதளத்தில் வெளியான கட்டுரையில் இருந்து...**

வண்ண வண்ண விளக்குகளால் இதுவரை இல்லாதபடிக்கு ஜொலிக்கும் வள்ளுவர் கோட்டம்...

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை, கோட்டத்துக்குள் ஒரே கூட்டம்! உள்ளே, திராவிடர் இயக்கம், தி.மு.க. தொடர்பான கருத்தரங்குகள் பல்வேறு அமர்வுகளாக நடைபெற்றுக்கொண்டு இருந்தன. உள்ளூர், வெளியூர் என்பதைவிட, வெளி மாவட்டங்களிலிருந்தெல்லாம் இளைஞர் கூட்டம் நிரம்பி வழிந்தது.

அருகிலேயே ஒரு புத்தகக் காட்சி, வித்தியாசமாக!

தலைப்பே, முற்போக்கு புத்தகக் காட்சி என்று வித்தியாசமாக இருந்தது. இதை நடத்துவது, முத்தமிழறிஞர் பதிப்பகம். இது, தி.மு.க. இளைஞர் அணியின் ஓர் அங்கம்.

புத்தகக் காட்சி அரங்கில் நுழைந்ததும், ஐப்பசியின் அடைமழை இல்லாத குளிரைவிடத் தூக்கலான அரங்கின் குளிர் நம்மை வரவேற்றது.

முதல் அரங்கமே முத்தமிழறிஞர் பதிப்பகக் கடைதான். வாசகர்கள் தாராளமாக வந்துசென்றபடி இருந்தனர். முந்தைய நாள் முதலமைச்சர் ஸ்டாலின் வெளியிட்ட ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ எனும் புத்தகம் சூட்டோடு சூடாக விற்பனை ஆகிக்கொண்டு இருந்தது.

புத்தகக்காட்சியின் அழைப்பிலேயே ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்திவிட்டார்கள், இது அரசியல் நூல்களின் அணிவகுப்பு என... அதற்கு ஏற்றபடியே பார்வையாளர்களும் வந்துபோனார்கள். மூன்றில் ஒரு பகுதியினர் கட்சி இளைஞர்களாக இருந்தனர்.

மொத்தம் 46 பதிப்பகங்கள் (சிலை அரங்கைத் தவிர்த்தால் 45), 58 கடைகள் என ஆர்ப்பாட்டம், வெற்றுக் கூச்சல் இல்லாமல் வாசகர்களுக்கு வசதியாக அரங்கை அமைத்திருக்கிறார்கள், ஏற்பாட்டாளர்கள். பெரும்பாலும் திராவிடர் இயக்கக் கொள்கை தொடர்பான, திராவிடக் கருத்தாளர்களின் எழுத்துகள் அடங்கிய புத்தகங்கள் அரங்கின் எல்லா கடைகளிலும் காணக் கிடைத்தன. இதே சமயம், திராவிடர் இயக்கத்தை விமர்சிக்கக்கூடிய வேறு சிந்தனைப் போக்குள்ள புத்தகங்களும் பல்வேறு கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. பொதுவுடைமை இயக்கம், அம்பேத்கரிய இயக்கம், தமிழ்த் தேசிய இயக்கம் ஆகியவற்றின் புத்தகங்களும், மேற்கத்திய இடதுசாரி ஆய்வு நூல்களும், தமக்கான தனித்தனி கடைகளைப் பிடித்திருந்தன.

இதுதான், இந்தப் புத்தகக் காட்சியின் முக்கியமான அம்சம். அதாவது, முற்போக்கு முகாம்களில், தான் மட்டுமே முற்போக்கு எனக் கூறிக்கொள்ளும் ஒரு போக்கு நெடுங்காலமாக இருந்துவரும் சூழலில், தி.மு.க. போன்ற தேர்தல் அரசியல் கட்சியின் இளைஞர் அமைப்பு இந்தப் புத்தகக் காட்சியை ஏற்பாடு செய்திருக்கிறது. இப்படியொரு நிகழ்வில், திராவிடர் இயக்கத்தை விமர்சிக்கும் இயக்கங்களுக்கும் இடமளித்து பல்வேறு கருத்தோட்டங்களை, வாசகர்களிடையே பரவ உதவியாக இருப்பது, பாராட்டப்பட வேண்டிய ஒன்றும்கூட!

விற்பனை நோக்கில் பார்த்தாலும், எந்தப் பதிப்பகத்தாருக்கும் கையைக் கடிக்கும்படியாக நிச்சயம் இந்தக் காட்சி விற்பனை இல்லை என அடித்துக்கூறுகிறார்கள்.

தவறாமல், திருநர்களுக்கான இடப் பங்கீடும் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டியது, திருநங்கை பிரஸ் அரங்கு. பெரியார் தொடங்கிய சுயமரியாதைப் பிரச்சார பதிப்பகத்துக்கும் இடம் உண்டு... புத்தம்புதிய பதிப்பக முனைவோராக இருந்தாலும், அவர்களின் பதிப்பு முயற்சிகளை அங்கீகரித்து, அய்யுறு வெளியீடு, காட்டாறு வெளியீடு போன்றவற்றுக்கும் கடைகள் உண்டு.

இப்படி, சென்னை முற்போக்கு புத்தகக் காட்சியில், எல்லாம் ‘வேற லெவல்’ என்கிறார்களே, அந்த மாதிரி... நற்போக்கு என்றும் சொல்லலாம்!